# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 41/2023 |
| Deposition of Witness | : | PW- 1 |
| Name | : | சண்முகஜீவா |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 56 |

**Accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.06.2023.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது குன்னத்தூரில் வசித்து வருகிறேன். KMR Pharmacy college ல் மேலாளராக பணியில் உள்ளேன். நான் எனது குடும்பத்துடன் தனிவீட்டில் செட்டிகவுண்டன் வலசு சேரன் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 20.10.2022 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும் எனது மனைவி சுசிலாவும் வேலைக்கு சென்றுவிட்டோம். அன்றைய தினம் காலை 11.00 மணி வரைக்கும் எனது மகன்கள் நிதீஷ் மற்றும் ராகுல் ஆகியோர் வீட்டில் இருந்துவிட்டு போட்டி தேர்விற்காக கோபிசெட்டிப்பாளையத்திற்கு சென்றுவிட்டார்கள்.

2. அவர்கள் மாலை 04.00 மணியளவில் திரும்பி வந்தபோது வீட்டின் மரகதவின் பூட்டு உடைந்திருந்தது. அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது எனது வீட்டில் உள்ள இரண்டு படுக்கை அறைகளில் இருந்த ஸ்டீல் பீரோக்களுள் ஒரு பீரோ உடைக்கப்பட்டும் மற்றொரு அறையில் இருந்த பீரோ திறந்த நிலையிலும் இருந்தது. எனது மகன் ராகுல் எனது மனைவிக்கும் எனக்கும் போன் செய்து தகவல் சொன்னார்.

R [signature] [signature] 27.6.23

3. நான் மாலை 05.00 – 05.15 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது தலா ஒரு பவுன் எடைக்கொண்ட தங்க காயின் –2, 1 1/4 பவுன் எடையுள்ள தங்க காயின் –1, 1/2 பவுன் எடையுள்ள தங்க காயின் –1, 1 1/2 பவுன் எடையுள்ள தங்க வளையல் – 1 ஆகியவை காணாமல் போயிருந்தது. பீரோவில் இருந்த துணிகளும் வெளியே கிடந்தது. நான் வருவதற்கு முன்பாகவே 4.30 மணியளவில் எனது மனைவியும் வந்துவிட்டார்.

4. நானும் எனது மகன்கள் இருவரும் நேரடியாக மாலை 06.30 – 07.00 மணியளவில் குன்னத்தூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். புகாரை நானே எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் புகார் கொடுத்து அரை மணி நேரத்தில் போலீசார் சம்பவ இடம் வந்துவிட்டார்கள். சம்பவத்தின் போது எனது வீட்டில் சிசிடிவி கேமரா இல்லை. இரவு 09.00 மணியளவில் கைரேகை நிபுணர்கள் வந்து கைரேகை சேகரித்தார்கள். எனது வீட்டில் இருப்பவர்களின் கைரேகைகளை சேகரித்துகொண்டார்கள்.

5. நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வழக்கின் விசாரணை நிலைப்பற்றி கேட்டு வருவேன். கடந்த 2022 வருடம் நவம்பர் மாதத்தில் 18 அல்லது 19 தேதி வாக்கில் போலீசார் எனக்கு போன் செய்து எனது நகைகள் காயின் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நான் அன்றைய தினம் மாலை வேளையில் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காண்பித்தேன். களவு போன நகைகளுள் சில நகைகள் கிடைக்கவில்லை. நான் அவற்றை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் நகைகள் தான் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன் **(அவற்றின் புகைப்படம் மற்றும் அதற்கான சாட்சிய சட்ட பிரிவு 65(பி) சான்று அ.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது).**

6. புகைப்படத்தில் உள்ள நகைகளுள் தங்க வளையல் ஸ்ரீ குமரன் தங்க மாளிகை ஈரோட்டில் 5 வருடத்திற்கு முன்பு வாங்கினேன். மற்ற தங்க காயின்கள் எனது முத்த ராகுலின் திருமணத்திற்கு பரிசாக வந்தவை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. இரண்டு பீரோவிலும் துணிகள் கலைந்து கிடந்திருந்ததா என்றால் தங்க நகைகள் இருந்த பீரோவில் மட்டும் தான் துணிகள் சிதறி கிடந்தது. மற்றொரு பீரோவில் துணிகள் கலையவில்லை. அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள நகைகள் எனது நகைகள் என காட்டுவதற்கு என்னிடம் எந்த ஆவணம் இல்லை என்றால் சரிதான். நான் களவு போன நகைகளின் அடையாளத்தை பற்றி புகாரிலோ -போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, எனக்கு அதன் வகைப்பற்றி தெரியாது. மிட்கப்பட்ட நகைகள் பழையது போல் உள்ளது என்றால் சரியல்ல, புதியவை அதற்கு 2 மாதங்களுக்கு முன்புதான் எனது மகனுக்கு திருமணமானது.

2. களவு போன தங்க காயின்களின் முத்திரைப்பற்றி புகாரிலோ விசாரணை வாக்குமூலத்திலோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் பீரோவிலும் கதவிலும் இருந்து கைரேகைகள் எடுத்தார்கள். நான் அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள வளையலை 2017 ம் வருடத்தில் வாங்கினேன். எனக்கு நகைகள் கிடைத்ததாக எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் மதிய வேலையில் வந்தது. அன்று காவல் நிலையம் சென்றபோது போலீசார் எனது மட்டும் தான் காண்பித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள எனது கையொப்பத்தின் கீழ் உள்ள தேதி யாரால் எழுதப்பட்டது என்றால் என்னால் எழுதப்பட்டது. தேதியில் உள்ள 2 என்ற எண்ணிற்கும் புகாரின் சங்கதிகளில் உள்ள 2 என்ற எண்ணிற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் அவை என்னால் எழுதப்பட்டவை தான்.

3. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வெற்று தாளிலில் தான்

கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள நகைகள் எனது நகைகள் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பொதுமக்கள் உள்ளே சென்ற பார்த்தனரா என்றால் இல்லை.

<u>**நீதிமன்ற கேள்வி :**</u> நீதிமன்றத்தில் பெற்று சென்ற வளையலை அடுத்த வாய்தாவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா?

<u>**பதில்**</u> : இயலும்.

<u>**நீதிமன்ற கேள்வி :**</u> அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள வளையலை உமது மனைவி அணிந்துள்ளது போல் புகைப்படம் எதேனும் உள்ளதா ?

<u>**பதில்**</u> : தேடிப்பார்த்துவிட்டு அடுத்த வாய்தாவில் ஆஜர் செய்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளபட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது

27.6.25

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.